# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : சிசி 278/2020**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 30.10.2023**

| Name : ராஜு | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுக்காரன் வளவில் குடியிருந்து சிக்கன் சென்டர் கடை வைத்து வேலை செய்கிறேன். நான் நடராஜ் என்பவருக்கு சொந்தமான வீட்டு மனையை 2018–ம் வருடம் விலைக்கு வாங்கி அனுபவித்து வந்தேன். இது சம்மந்தமாக சின்னபையன் என்பவர் நிலத்தில் உரிமை உள்ளது என்று சொல்லி தகறாறு செய்தார். கடந்த 17.12.2019–ம் தேதி மாலை 03.30 மணியளவில் எங்களுடைய நிலத்தில் சின்னபையன் என்பவர் மண்ணை டிராக்டர் மூலம் கொண்டு வந்து கொட்டினார்.

2) இதனை கண்ட நான் ஏன் மண்ணை கொட்டுகிறீர்கள் என்று கேட்டபோது, தகறாறு நடந்தது. அப்போது, எதிரி சின்னபையன் என்னை தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் பேசி, கீழே தள்ளிவிட்டார். எதிரி ரவி கம்பியை எடுத்துவந்து எனது வலது பக்க கண்ணத்தில் தாக்கினார். வேலு என்பவர் கையால் எனது நெஞ்சில் குத்தினார்.

3) அப்போது, சின்னபிள்ளை , நாகலட்சுமி ஆகியோர் செருப்பால் எனது கன்னத்தில் அடித்தார்கள். பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். தகவல் கேட்டு வந்த எனது மகன் என்னை காவல் அழைத்து சென்று காவலர் அறிவுறுத்தலின் பேரில் பிறகு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனை சென்று பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனை சென்று சேர்ந்தேன்.

4) நான் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது, காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். எதிரி சின்னபையன், ரவி, வேலு, சின்னபிள்ளை, நாகலட்சுமி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். 1,2 ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. மற்ற எதிரிகளை சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5) போலிசார் எத்தனை நாட்கள் கழித்து வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் முதல்நாளிலேயே ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். எழுதி வாங்கிகொண்டார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேதன். மருத்துவமனைக்கு யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் எனது மகன் அழைத்து சென்றார்.

6) நாங்கள் எந்த வாகனத்தில் மருத்துவமனை வந்தோம் என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தோம். நான் சுயநினைவுடன் இருந்து மருத்துவரிடம் நான் தான் நடந்த விவரங்களை சொன்னேன் என்றால் சரிதான். எத்தனை நபர்கள் என்னை அடித்ததாக கூறினேன் என்றால் 5 நபர்கள் அடித்தாக கூறினேன். 15 நபர்கள் என்னை அடித்தாக மருத்துவர் எழுதியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

7) மேட்டூர் அரசு மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்றால் எனது மகன் மனோகர், சிவா ஆகியோர் அழைத்து சென்றார்கள். எனது மனைவி என்னை ஜலகண்டாபுரம் மருத்துவமனையில் சேர்த்தாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 1–ம் எதிரி சின்னபையன் மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் OS 156/2018 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

8) பிரச்சனைக்குரிய இடம் எதிரிகளுக்கு சொந்தமானது என்று வழக்கு உள்ளது என்றால் சரிதான். என்னை அடித்த இடம் யாருக்கு சொந்தமானது என்றால் மாரியப்பன் என்பவரது பட்டா நிலம் ஆகும். நான் 1 மற்றும் 3 எதிரியை அடித்தாக STC 586/2021 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்காகும்.

9) எத்தனை ஆண்டுகளாக நிலப்பிரச்சனை உள்ளது என்றால் 2018–ம் வருடத்திலிருந்து பிரச்சனை இருந்து வருகிறது. அடிக்கடி எங்களுக்குள் பிரச்சனை

ஏற்பட்டு நாங்கள் காவல் நிலையம் சென்று நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்புவார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது சம்பவயிடத்தில் எத்தனை பேர் இருந்தனர் என்றால் 20 நபர் இருந்தனர். ஆனால் யார் யார் என்று பெயர் விவரம் நினைவில்லை.

10) இந்த வழக்கின் 3–ம் சாட்சி அருண் என்பவர் யார் என்றால் எனது மகனின் நண்பர் மற்றும் உறவினர் ஆவார். அவர் எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடம்வந்தார் என்றால் சம்பவம் நடந்ததாக கூறப்படும்நேரத்தில் இருந்து சுமார் அரை மணி நேரம் கழித்து அருண் என்பவர் சம்பவயிடம் வந்தார்.

11) 3–ம் எதிரி சின்னபிள்ளைக்கு 52 வயது என்றால் என்றால் 42 இருக்கும் ஆனால் சரியாக தெரியவில்லை. அவர் வயதான பெண்மணி என்றும், அவர் தன்னை அடித்தது நம்பமுடியாத விஷயம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொல்லும் இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், நான் தான் வழக்கின் எதிரிகளை அடித்து விட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது தவறுதலான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : சிசி 278/2020**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 30.10.2023**

| | |
|---|---|
| **Name : முத்துகுமரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019–ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 18.12.2019–ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.பழனிசாமி என்பவர் கொடுத்த உத்தரவின் பேரில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் பழனிசாமி உத்தரவின் பேரில் நான் மருத்துவமனை சென்று ராஜு (50) த/பெ குழந்தைகவுண்டர் கவுண்டப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் எந்த தேதி என்னை விசாரித்தார் என்றால் 10.06.2020–ம் தேதி விசாரித்தார்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டுர்.**